# வேத பாரதி செய்திகள்


VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 8 இதழ் :8 மே : 2024 ரூ.20/-

Volume: 8 Issue : 8 May : 2024 Rs.20/-


## ஸ்ரீ ராமானுஜர்



# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



## அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**88வது பாராயணம் - 12.04.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ ஆலையம்மன் திருக்கோவில்**

தேனாம்பேட்டை, சென்னை - 18.

**89வது பாராயணம் - 19.04.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் திருக்கோயில்**

ஆண்டாள் நகர், ஆதம்பாக்கம்

**சித்ரா பௌர்ணமி சிறப்பு நிகழ்ச்சி**

**நவாவரண பூஜை, ஸ்ரீ சண்டி ஹோமம், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம், அர்ச்சனை**

**ஸ்ரீ மதுரகாளியம்மன் திருக்கோயில்**

சிறுவாச்சூர், பெரம்பலூர்

**90வது பாராயணம் - 26.04.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ பிடாரி இளங்காளி அம்மன் திருக்கோவில்**

சைதாப்பேட்டை, சென்னை.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 57

**யேந ஸூர்ய ஜ்யோதி1ஷா பா3த4ஸே த1மோ**
**ஜக3ச்ச விஸ்வமுதி3ர்யஷி பா4நுநா**
**தே1நாஸ்மத்3 விஸ்வாமநிராமநாஸுதி1ம்**
**அபா1மீவாமப1 து3ஷ்ஷ்வப1ந்யம் ஷுவ**
**- ரிக் வேதம், ஸூர்ய ஸூக்தம்**

**பொருள் :** *ஸூர்ய தேவா, எந்த ஒளியால் இருளை விலக்குகிறாயோ, அசைகின்றஒவ்வொன்றையும் எந்த ஒளியால் தூண்டுகிறாயோ, அந்த ஒளியால் எங்கள் வறுமை, யஜ்ஞம் செய்யாமையால் வரும் தோஷம், நோய், தீய கனவுகள் அனைத்தையும் போக்குவாயாக!*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 8 இதழ்: 8

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231

# ☞ புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| வைகாசி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 14 |
| ஆதிசங்கரர் | 17 |
| மூதுரை (ஔவையார்) | 19 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 20 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 24 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 26 |
| தர்மத்தின் குரல் | 34 |
| பூக்களோடு பேசுவோம் | 35 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 38 |
| வீடு பார்க்கும் படலம் | 41 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 44 |
| பத்தின் சிறப்புகள் | 46 |

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## உங்கள் சிந்தனைக்கு....

## 8. பிரச்சனை இல்லாமல் வாழ

*1. எந்த விஷயத்திலும் நேர்மையைக் கையாளுவோம்.*

*2. நான் ஏன் இப்படி இருக்கிறேன்? என்ற தாழ்வு மனப்பான்மையை விடுங்கள். தன்னைத் தானே வீழ்த்திக் கொள்ளக் கூடாது (இதைத்தான் பகவான் கீதையில் 6ஆவது அத்தியாயத்தில் 5ஆவது ஸ்லோகத்தில் கூறுகிறார்)*

*3. தவறு செய்தால் கௌரவம் பார்க்காமல் மன்னிப்பு கேட்போம்.*

*4. அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்த கூடாது. மனம் திறந்து பிரச்சனைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்வோம்.*

*5. மற்றவர்களின் நிறைகளை மனதாரப் பாராட்டுவோம். மற்றவர்களை விட நம்மை உயர்வாக நினைத்துக்கொண்டு கர்வப்பட கூடாது.*

*6. அடுத்தவர்களை கண்டிக்கக்கூடிய அதிகாரமும், நியாயமும் நம் பக்கம் இருந்தாலும் அவர்களை மன்னிக்க வழி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.*

*7. அடுத்தவர்களிடம் சம்பந்தமில்லாமலும், அர்த்தமில்லாமலும் பின் விளைவுகளை அறியாமலும் பேசக்கூடாது. பேசும்போது இனிய இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துவோம்.*

*8. எப்போதும் எந்த விஷயத்தையும் முடிவு எடுத்துவிட்டு பேசவேண்டும். பேசிவிட்டு முடிவு எடுக்கக்கூடாது.*

*9. பொறாமை வேண்டாம். அது நம்மையே கொல்லும்.*

*10. அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பை வைக்கக் கூடாது. தேவைக்கு அதிகமாக ஆசைப்படவும் கூடாது.*

*11. முடிந்தவரை விட்டுக்கொடுப்போம். விட்டுக்*

கொடுப்பவர்கள் கெட்டுப்போவதில்லை, கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

12. நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அப்படியே மற்றவர்களை நாம் நடத்துவோம்.

இவை அனைத்தையும் நாம் கடைப்பிடித்தால் நம் வாழ்க்கையில் **“பிரச்சனை”** என்பது பூஜ்ஜியம் ஆகும்.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

## வாழ்த்துக்கள்

வேதபாரதி குழுவில் உள்ள ஸ்ரீ ஜெயராமன் - ஸ்ரீமதி சௌமியா அவர்களின் குமாரன் **சிரஞ்சிவி.தேஜஸ் (எ) ஆனந்த சாம்ப பரமேஸ்வரனுக்கு 21.04.2024 ஞாயிறு** அன்று நங்கநல்லூர் **ஸ்ரீ கணேஷ் மண்டலியில்** உபநயன ப்ரும்மோபதேசம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

குழந்தைக்கு வேதபாரதியின் ஆசிர்வாதங்கள். வேதபாரதியின் சார்பில் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு வடுவை ஆசிர்வாதம் செய்தார்கள்.

---

வேதபாரதியின் வேதபாரயண குழு உறுப்பினர் ஸ்ரீ சிவராம சுப்ரமணியன் - ஸ்ரீமதி சுப்புலட்சுமி குமாரன் **சிரஞ்சீவி.ஸ்ரீராமுக்கும்** பாலக்காடு, ஸ்ரீ ஆர்.ராமன் - ஸ்ரீமதி. தங்கமணி அவர்களின் குமாரத்தி **சௌ. ஸ்வேதாவுக்கும்** மடிப்பாக்கம் **ஜெய சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் 15.04.2024 திங்கட்கிழமை** திருமணம் நடைபெற்றது. வேதபாரதியின் சார்பில் பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு மணமக்களை ஆசிர்வாதம் செய்தார்கள்.

# அட்டைப்பட விளக்கம்

# ஸ்ரீராமானுஜர்

ஸ்ரீ பெரும்புதூர் சென்னையிலிருந்து காஞ்சீபுரம் செல்லும் வழியில் உள்ளது என்று நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீபெரும்புதூருக்கு **"பூதபுரி"** என்று பெயர் இந்த ஊரில் வசித்துவந்த **"ஆசூரி கேசவ சோமயாஜி", "காந்திமதி"** தம்பதியினருக்கு சென்னை திருவல்லிக்கேணி பாரத்தசாரதி பெருமாள் அருளால் (கலியுகம் 4118) கி.பி. 1017ம் ஆண்டு சித்திரை 12 ம் நாள் வியாழக்கிழமை திருவாதிரை வளர்பிறை, கடக லக்னத்தில், சுக்ல பக்ஷத்து பஞ்சமியில் வியாழக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தையுடைய தாய்மாமன் பெரிய திருமலை நம்பி, குழந்தை ராமருடைய தம்பி லட்சுமணன் போல் இருந்ததால் குழந்தைகது **"ராமானுஜன்"** என்று பெயர் சூட்டினார். அனுஜன் என்றால் இளையவர் எனப் பொருள் ராமன் + அனுஜன் = ராமானுஜன் (மலையாளத்தில் தம்பியை "அனியன்" என்றுதான் கூறுவார்கள்) இவர் ஆதிசேஷனின் மறு அவதாரம் என்பது ஐதீகம். 1024-ஆம் ஆண்டு ராமானுஜருக்கு அவருடைய 7வது வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டது.

ராமானுஜர் தன் தந்தையிடமே வேதங்களை எல்லாம் கற்று 15 வயதுக்குள் பூர்ண ஞானம் பெற்றார். ஆனால் 16-ம் வயதில் தன்னுடைய தந்தையை இழந்தார். 17ம் வயதில் திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் **"தஞ்சம்மாள்".** பிறகு காஞ்சியில் குடியேறி திருபுட்குழி என்றஊரில் வாழ்ந்துவந்த **"யாதவப்பிரகாசர்"** என்பவரிடம் பாடங்களைக் கற்றார். பல்வேறு சமயங்களில் குருவிடம் ராமானுஜருக்குக்

கருத்துவேறுபாடு ஏற்பட்டது. அதனால் கோபம் அடைந்த குரு இவரைக் கொன்றுவிடவும் திட்டமிட்டார். ஆனால் பெருமாளின் கருணையால் அந்தச் சதியிலிருந்து தப்பித்தார். அதன்பிறகு தாழ்ந்த குலத்தில் பிறந்த **"திருக்கச்சி நம்பி"** என்பவரைத் தன் குருவாக ஏற்றார்.

ஸ்ரீராமானுஜர்ஆளவந்தாரைத் தம்முடைய குருவாக ஏற்கவிரும்பித் திருவரங்கம் சென்றார். ஆனால் அவர் செல்வதற்குள் ஆளவந்தார் இறைவனுடன் இணைந்துவிட்டார் என அறிந்து மனம் வருந்தினார். ஆளவந்தாரின் பூத உடலில் வலது கரத்தில் மூன்று விரல்கள் மடங்கியிருந்ததைக் கண்ட ஸ்ரீராமானுஜர் அதற்கான காரணத்தை அறிந்து "அவரது அருளாலே அவருடைய நிறைவேறாத மூன்று ஆசைகளை அடியேன் நிறைவேற்றுவேன்" என்று சூளுரைத்ததும் மடங்கியிருந்த மூன்று விரல்களும் நீண்டுகொண்டனவாம். "பெரும் மகானாகிய ஆளவந்தாரைக் கவர்ந்துவிட்ட திருவரங்கனை நான் சேவிக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு ஸ்ரீ ராமானுஜர் காஞ்சிக்குப் புறப்பட்டுவிட்டார். ஸ்ரீராமானுஜரின் மனைவி **"தஞ்சம்மாள்"** தன் கணவருடன் உள்ளன்போடு வாழவில்லை. அவர் ஜாதி ஏற்றத்தாழ்வைக் கொண்டிருந்தார். அவரின் தாம்பத்ய வாழ்வில் மூன்று சந்தர்ப்பங்களில் சாதி ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்தினார். அதன் காரணமாக அவரே வீட்டைவிட்டு தன் தாய்வீட்டுக்குப் போக காரணமாக இருந்தார். அதன்பின் கி.பி. 1049-ம் ஆண்டு அதாவது 32வது வயதில் ஸ்ரீ ராமானுஜர் துறவறம் மேற்கொண்டார்.

ஸ்ரீராமானுஜர் திருக்கோட்டியூர் சென்று அங்கு வசித்துவந்த **திருகோட்டியூர் நம்பியை** வணங்கி

*திருமந்திரத்தின் திரண்ட பொருளைக் கற்றுத்தரும்படி கேட்டார். ஆனால் நம்பியோ ஸ்ரீராமானுஜரை 18 முறைதிருப்பி அனுப்பினார். இருப்பினும் ஸ்ரீராமானுஜர் இடைவிடாது முயற்சித்தார். அவருடைய திடமான மனதைக் கண்டு நம்பி அவர்கள்* **அஷ்டாக்ஷர** *மந்திரத்தையும் அதன் உட்பொருளையும் கூறி "இந்த திருமந்திரத்தை பிறருக்குச் சொன்னால் உமக்கு நரகம் கிட்டும்" என்று கூறி அனுப்பினார். ஆனால் ஸ்ரீராமானுஜர் தான் நரகத்தை அடைந்தாலும் பரவாயில்லை இந்த கலியுகத்தில் அனைவரும் உய்யவேண்டும் என்ற அவாவினால் தன் குருவின் ஆணையையும் மீறி திருக்கோட்டியூர் கோயில் மதில்மேல் ஏறி நின்று எல்லோரையும் அழைத்து "மகா ஜனங்களே நீங்கள் எல்லோரும் துக்கத்திலிருந்து விடுதலை அடைய நான் கூறும் இந்த மந்திரத்தை மூன்று முறைகூறுங்கள்" என்று கூறி* **"ஓம் நமோ நாராயணாய"** *என்று கூறினார். கூடியிருந்த அனைவரும் அவ்வாறேகூறித் தொழுதார்கள். இதைக் கண்ட நம்பி ஸ்ரீராமானுஜரின் பரந்த மனப்பான்மையைப் போற்றி அவரை* **"எம்பெருமான்"** *என்று அழைத்தார்.*

*ஸ்ரீராமானுஜர் பரிபூர்ண ஆயுளான 120 ஆண்டுகள் வாழ்ந்தார். (கிபி 1017 முதல் கிபி 1137) அறுபது ஆண்டு காலம் ஸ்ரீரங்கத்தில் ஞானமுரசாக வாழ்ந்தார். அறுபதாண்டுக்காலம் இந்திய மண்ணில் திவ்விய ஸ்தலங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரை சென்றார். பல திருக்கோயில்களைக் கட்டி பல நியமங்களை வகுத்தார். ஜாதி மத பேதம் கடவுளுக்கு இல்லை என்பதை எல்லோருக்கும் உணர்த்தினார். கடவுள் ஒருவருக்குமே சொந்தமானவன் அல்ல. மதத்தின் பெயரிலான*

ஆவணக் கருத்துக்களையும், பத்தாம் பசலித்தனமான கொள்கைகளையும் வழிமுறைகளையும் கடுமையாக எதிர்த்தார். பிராமண குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடு பட்டு தீண்டாமை ஒழிப்பு ஜாதி வேறுபாட்டைக் களைந்து தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிபி 1137-ல் தன்னுடைய 120வது வயதில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராமானுஜர் பகவானுடைய திருவடியை அடைந்தார். ஸ்ரீராமானுஜர் பரமபதம் அடைந்தபோது **“தர்மோ நஷ்ட”** (தர்மத்திற்கே பெருத்த நஷ்டம்) என்று அசரீரி ஒலித்ததாம்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீ அரங்கநாத ஸ்வாமி திருக்கோயிலில் ஸ்ரீ ராமானுஜருக்குத் தனிச் சன்னதி ஒன்று இருக்கிறது. அந்த சன்னதியில் திரிதண்டத்துடன் அமர்ந்த நிலையில் இருக்கும் ஸ்ரீராமானுஜரின் சிலையில் கண்புருவங்கள், இமைகளும் நாசித்துவாரங்களும், உதடுகளும், நகங்களும் தத்ரூபமாக இருக்கின்றன. அதைச் சிலை என்று நம்புவதே கடினம். அது ஸ்ரீ ராமானுஜரின் உண்மையான திருவுருவம்தான் என்று ஒரு சிலரும், அல்ல அது ஒரு சிலைதான் என்று சிலரும் கூறுகிறார்கள். ஸ்ரீராமானுஜர்தான் இன்றும் ஸ்ரீரங்கம் கோயிலை நிர்வகித்துவருவதாக நம்புகிறார்கள். அதற்கு சான்று இன்றும் கோயில் வரவு செலவு கணக்குகள் அவருடைய சன்னதியில் வாசிக்கப்படுகிறது. இன்றும் அனைத்து பூஜைகளும் ஸ்ரீராமானுஜருக்கு நடத்திய பிறகுதான் பெருமாளுக்கு நடைபெறுகிறது.

12.05.2024 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ராமானுஜரின் 1007வது ஜெயந்தி.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

# குரோதி வருஷம் - வைகாசி மாத விசேஷங்கள்
**(மே 14.05.2024 முதல் ஜுன் 14.06.2024 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *14.05.2024* | வை *1* | செவ்வாய் | ஷஷ்டி |
| *19.05.2024* | வை *6* | ஞாயிறு | ஏகாதசி |
| *20.05.2024* | வை *7* | திங்கள் | ப்ரதோஷம் |
| *22.05.2024* | வை *9* | புதன் | ஸ்ரீ நரஸிம்ம ஜெயந்தி |
| *23.05.2024* | வை *10* | வியாழன் | பௌர்ணமி, வைகாசி விசாகம் |
| *24.05.2024* | வை *11* | வெள்ளி | அனுஷம், காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவாள் ஜயந்தி |
| *26.05.2024* | வை *13* | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி |
| *29.05.2024* | வை *16* | புதன் | ஷஷ்டி |
| *02.06.2024* | வை *20* | ஞாயிறு | ஏகாதசி |
| *04.06.2024* | வை *22* | செவ்வாய் | ப்ரதோஷம் |
| *05.06.2024* | வை *23* | புதன் | க்ருத்திகை விரதம் |
| *06.06.2024* | வை *24* | வியாழன் | அமாவாஸ்யை |
| *10.06.2024* | வை *28* | திங்கள் | சதுர்த்தி |
| *12.06.2024* | வை *30* | புதன் | ஷஷ்டி |

## 06.06.2024 வியாழக்கிழமை - அமாவாஸை

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே வஸந்தருதௌ, ரிஷப மாஸே, க்ருஷ்ண பக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து இந்து வாஸர யுக்தாயாம் ரோகிணி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஸகல கரண ஏவம்குண விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 60

## அத்தியாயம் – 3

## கர்ம யோகம்

**இஷ்டான் போ$^4$கா$^3$ன்ஹி வோ**
**தே$^3$வாதா$^3$ஸ்யந்தேயக்ஞபா$^4$விதா:/**
**தைர்த$^3$த்தானப்ரதா$^3$யைப்$^4$யோ**
**யோ பு$^4$ங்க்தே ஸ்தேன ஏவ ஸ:// (கீதை 3-12)**

**பொருள் :** *யாகத்தால் (வேள்வியால்) பேணப்பெற்றதேவர்கள் உங்களுக்கு நாடிய போகங்களை நல்குவார்கள். அங்ஙனம் அவர்களால் கொடுக்கப்பெற்று அவர்களுக்குக் கைம்மாறு அளிக்காது நுகர்பவன் திருடன்.*

**விளக்கம் :** *பகவான் யாரையோ திருடன் என்கிறார். யாரை? தனக்கு கிடைத்ததை மற்றவர்களுக்கு பங்கு வைக்காமல் தனக்கு மட்டுமே வைத்துக் கொள்பவனை* **"திருடன்"** *என்கிறார். பங்கு வைத்தல் என்றால் நம்மிடம் இருக்கும் செல்வத்தை மட்டும் அல்ல, நம்மிடம் இருக்கும் அறிவையும் மற்றவர்களுக்கு பங்கு வைக்க வேண்டும். இயற்கையானது 24 மணி நேரமும் சலிக்காமல் இந்த பங்குவைக்கும் வேலையைச் செய்துகொண்டே இருக்கிறது. பூமியை எடுத்துக்கொண்டால் பூமியில் பெய்யும் மழை தண்ணீரை பூமி முழுவதுமாக உறிஞ்சி குடிப்பதில்லை. அந்த தண்ணீரை தன்னில் வைத்துக்கொண்டு நமக்கு தருகிறது. இதுபோல் வாயு நமக்கு வேண்டிய சுவாசிக்கும் வாயுவைத் தருகிறது. நதிகளும் தமக்காக*

*ஓடுவதில்லை. இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது உலகில் உள்ள இயற்கை செல்வங்களை நாம் நல்ல வழியில் உபயோகித்து அதிலிருந்து கிடைக்கும் பலனை எல்லோருக்கும் பங்கு வைத்து அனுபவிக்க வேண்டும். அப்படி இல்லாமல் தான் மட்டுமே அனுபவிக்க நினைப்பவன்* **“திருடன்”**

**யக்ஞசிஷ்டாசின: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பி[3]ஷை:/**
**பு[4]ஞ்ஜதே தே த்வக[4]ம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத்//**
**(கீதை 3-13)**

**பொருள் :** *வேள்வியில் மீதமாக எஞ்சிய உணவை உண்கின்ற சான்றோர்கள், எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். ஆனால், எந்தப் பாவிகள் தம் உடலைப் பேணுவதற்காகவே உணவைச் சமைக்கிறார்களோ, அவர்கள் பாவத்தையே உண்கிறார்கள்.*

**விளக்கம் : “யாகம்”** *அல்லது* **“வேள்வி”** *என்பது நாம் அன்றாடம் செய்யும் கடமை. அதை தனக்கு என்று மட்டும் செய்யக்கூடாது. கர்மயோகம் கூறுவது : உனக்காக மட்டும் உழைக்காதே, உன்னையும் தாண்டி இந்த சமுதாயம், அதில் வாழும் மக்கள் உயரவேண்டும் என்று யோசி. அதற்காக பாடுபடு. குடும்பம், உறவு, நட்பு, இந்த சமுதாயம், நாடு என்று யோசிக்க வேண்டும்.*

**“யக்ஞம்”** *(கர்மம்) செய்யாத வாழ்நாள் வீண் நாளாகிறது. அவ்வாறு வீண் நாளாகாமல் இருப்பதற்கு நாம் தினமும் ஐம்பெரும் வேள்விகளை (யக்ஞங்களை) செய்ய வேண்டும். அவை “தேவயக்ஞம்” “ரிஷியக்ஞம்”, “பித்ருயக்ஞம்”, “நரயக்ஞம்”, “பூதயக்ஞம்”.*

*கர்மயோகம் தொடரும்...*

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 39

## ஸ்கந்தம் 4

## வானத்தில் உதித்த புதிய நட்க்ஷத்ரம்

## துருவ சரித்திரம்

*சென்றமாத தொடர்ச்சி...*

*ஸ்ரீ நாரதரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட துருவன் மதுவனம் சென்று அங்கு யமுனையில் நீராடி, அன்றைய இரவு உபவாசம் ஏற்றான். பின்னர் நாரதர் கூறியபடி பகவானை மனத்தில் நினைத்து உபாசிக்க ஆரம்பித்தான்.*

*முதல் ஒரு மாதம் மூன்று தினங்களுக்கு ஒரு முறைவிளாம்பழம், இலந்தைப் பழம் முதலியவற்றைஉண்டு பகவானை பூஜித்தான். இரண்டாம் மாதம் ஆறு தினங்களுக்கு ஒரு முறைஉலர்ந்த இலைகளையும், சருகுகளையும், புற்களையும் உணவாகக் கொண்டு பகவானை ஆராதித்தான். மூன்றாவது மாதத்தில் ஒன்பது நாட்களுக்கு ஒரு முறை யமுனை நீரை மட்டும் உட்கொண்டு தியானத்தில் ஆழ்ந்தான். நான்காவது மாதம் பன்னிரெண்டு நாட்களுக்கு ஒரு முறைமட்டுமே சுவாசித்தான். ஐந்தாவது மாதம் முதல் அவனது நிஷ்டை கலையவே இல்லை. ஒற்றைக்காலில் தூண்போல் நின்று மூச்சையடக்கி முற்றிலுமாக மனத்தை உள்முகமாகத் திருப்பி பகவானின் திவ்ய மங்கள ரூபத்தை தியானம் செய்தான்.*

*துருவனுடைய தவத்தின் கடுமையால் மூவுலகங்களும் நடுங்கின. அவன் மூச்சை நிறுத்தியதும்*

அனைத்து உயிர்களும் பிராணவாயு இன்றி மூச்சு தடைப்பட்டது. இதை அறிந்த தேவர்கள் அனைவரும் பகவானை சரணடைந்து "பகவானே அனைத்து ஜீவராசிகளுக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. எங்களைக் காக்க வேண்டும்" என்றார்கள். அதற்கு பகவான் "தேவர்களே, நீங்கள் பயப்படவேண்டாம். உத்தானபாதனின் மகன் துருவன் மூச்சை நிறுத்தி, மனத்தை என்னிடமே ஒருமுகப்படுத்தித் தவம் செய்கிறான். எனக்கே அவனைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. நான் போய் அவனுக்கு தரிசனம் கொடுத்து அவனது தவத்தை திருப்பி விடுகிறேன். நீங்கள் தைரியமாக உங்கள் இருப்பிடம் செல்லுங்கள் என்று கூறிவிட்டு உடனே கருடன் மேலேறி துருவன் இருக்கும் இடத்திற்கு வந்தாராம். "பகவான் துருவனுக்கு தரிசனம் கொடுக்கவரவில்லை குழந்தையை தரிசிக்க வந்தார்" என்று வர்ணிக்கிறது ஸ்ரீமத் பாகவதம்.

பகவான் துருவனின் முன் போய் நின்றபோதும் கூட துருவன் கண்களைத் திறக்கவில்லை. காரணம் அவன் அந்தர்யாமியாக தன் ஹ்ருதயத்தில் கண்களைச் சிமிட்டிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் நிற்கும் பகவத் ஸ்வரூபத்தை பார்ப்பதில் ஈடுபட்டிருந்தான். உடனே பகவான் துருவன் தன் ஹ்ருதயத்தில் பார்க்கும் அந்த ரூபத்தை மறைத்துவிட்டாராம். (ஹ்ருத்பத்மகோஸே ஸ்புரிதம் தடித்ப்ரபம் – பா 4-9-2) உடனே துருவன் கண்களைத் திறந்து பார்த்தபோது அவன் தன் ஹ்ருதயத்தில் தியானித்த அதே ரூபத்தை நேரில் கண்டானாம். உடனே பகவானின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். பின்பு பகவானைத் துதிக்க வேண்டும் என்று நினைத்தான். ஆனால் ஒன்றும்

*சொல்லத் தெரியாமல் திருதிருவென்று விழித்தான். இதை உணர்ந்த பகவான் தன்னுடைய* **“பாஞ்ச ஜன்யம்”** *என்னும் சங்கை எடுத்து துருவனின் கன்னத்தைத் தொட்டார். உடனே துருவனின் உள்ளே இருந்த ஸரஸ்வதி உணர்ந்துவிட்டாள். உடனே துருவன் இரு கரங்களையும் கூப்பி பகவானை ஸ்துதிக்க ஆரம்பித்துவிட்டான். அதுதான் பிரசித்திப் பெற்ற“த்ருவ ஸ்துதி”.*

*(ஸ்ரீமத் பாகவதத்தில் ஐந்து ஸ்துதிகளும், ஐந்து கீதங்களும் மிக முக்கியமானவை. இந்த “த்ருவ ஸ்துதி” ஸ்ரீமத்பாகவதத்தில் 4ஆவது ஸ்கந்தத்தில் 9ஆவது அத்தியாயத்தில் 6 முதல் 17 வரையிலும் மொத்தம் 12 ஸ்லோகங்களில் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது)*

*துருவன் பகவானை ஸ்துதி செய்ததும் பகவான் என்ன கூறினார்?*

*பகவான் கூறியது அடுத்த மாதம்.*

*(கற்பக விருக்ஷம்போல் திகழும் ஸ்ரீமத் பாகவதத்தைத் தொடர்ந்து படித்து அதில் லயித்துவிட்டால் மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை எளிதில் அடையலாம்)*

*தொடரும்...*

99940 89133



99940 89140

SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

*அத்வைத ஆசான்*

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **அத்தியாயம் — 12** **பகுதி 30**

## திவ்ய சந்திப்பு

ஸ்ரீ வியாஸர் ஸ்ரீ சங்கரரிடம் “தாங்கள் இங்கிருந்து பிரயாகம் சென்று குமாரிலபட்டர் என்ற மீமாம்ஸகரைக் காணவேண்டும்” என்று கூறியதும் ஸ்ரீசங்கரர் தம் சிஷ்யர்களுடன் உத்தரகாசியிலிருந்து கிளம்பி ப்ராசீனகௌசாம்பி வழியாக பிரயாகத்தை நோக்கி நடந்தார்.

(கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் சங்கமிக்கும் இடம்தான் **“பிரயாகை”**) அவர் பிரயாகத்தில் நுழைவதற்கு முன்பு சில ப்ராஹ்மணர்கள் பிரயாகையை விட்டு வெளியேறுவதைக் கண்டார். அவருடைய சிஷ்யர்களில் ஒருவர் அவர்களிடம் “நீங்கள் எல்லாம் எங்கே போகிறீர்கள்?” என்று கேட்டார். அதற்கு அந்த கூட்டத்தில் இருந்த ஒரு மீமாம்ஸகர் “குமாரிலபட்டர் **துஷாக்னியில்** (உமிக்குவியலில் உள்ள அக்னி) சிறிது சிறிதாக வெந்து கொண்டிருக்கிறார். அவருடைய அக்னிப் பிரவேசத்தைக் காண்பது மஹாபாபம். அதனால் நாங்கள் காசிக்கு போகிறோம்” என்றார்.

இதைக்கேட்ட ஸ்ரீசங்கரர், ஆசாரியார் குமாரிலபட்டரைக் காண்பதற்காக வெகு விரைவாகச் சென்றார். ஸ்ரீசங்கரர் அங்கு போனதும் குமாரிலபட்டரின் உடல் முழுவதும் வெந்துவிட்டிருந்தாலும் முகம் மட்டும் தாமரை மலர்போல் காணப்பட்டது. ஸ்ரீசங்கரரைக் கண்டதும் மிகவும் மகிழ்ச்சி அடைந்த குமாரிலபட்டர் “நான் உங்களுடைய பாஷ்யங்களைப் படிப்பதற்கும்,

உங்களுடைய உபதேசத்தை கேட்பதற்கும் ஜீவனோடு இருப்பதற்கும் எனக்கு பாக்கியம் இல்லாமல் போய்விட்டது. பூர்வ ஜன்மத்தில் நான் செய்த புண்ணியத்தின் பலனாய் தங்களின் தரிசனம் எனக்கு கிடைத்தது" என்றார். இதைக்கேட்ட ஸ்ரீசங்கரர் "நீங்கள் நினைத்தது நடக்க உங்களுடைய முடிவை நீங்கள் மாற்றிக்கொள்ள முடியாதா?" என்று கேட்டார்.

அதற்கு குமாரிலபட்டர் "இதற்கு மேல் என்னால் எதையும் செய்ய இயலாது தங்களுடைய வேதாந்தத்தைப் பரப்புவதற்கு என்னுடைய சிஷ்யர்களில் ஒருவர் **"மாஹிஷ்மதி"** என்ற இடத்தில் இருக்கிறார். அவருடைய பெயர் **"மண்டனமிச்ரர்",** அவருடைய தர்ம பத்தினி **"உபயபாரதி"** என்னும் **"ஸரஸவாணி",** ஸாக்ஷாத் ஸரஸ்வதியின் அவதாரம், ஞானஸ்வரூபிணி. நீங்கள் அந்த இருவரையும் போய் பார்த்து அனுக்ரஹம் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். தாங்கள் தற்போது எனக்கு ப்ரணவோபதேசம் செய்ய வேண்டும்" என்று வேண்டினார்.

ஸ்ரீசங்கரர் குமாரிலபட்டருக்கு ஆத்ம தத்துவத்தையும், ப்ரணவத்தையும் உபதேசித்தார். அதைக் கேட்டுக்கொண்டே குமாரிலபட்டர் எந்தவித வேதனையும் இல்லாமல் சரீரத்தை விட்டார்.

அதன்பிறகு ஸ்ரீசங்கரர் தன் சிஷ்யர்களுடன் **"மாஹிஷ்மதிக்கு"** புறப்பட்டார். தொடரும்.....


**புதிய வேத வகுப்புகள் ஆரம்பம் (ONLINE)**

*வார இறுதி நாட்கள் மாலை இரவு 7.30 முதல் 9.00 மணி வரை ஸந்த்யாவந்தனம், சூக்தங்கள், ப்ரம்ஹஸ்ரீ கைலாச கனபாடிகள் குருஜி, கும்பகோணம்.*

: **94434 95950**

# ஔவையார் "மூதுரை"

***"மூதுரை"** = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் **"மூதுரை"** என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 20

**உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா**
**உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா**
**மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்**
**அம் மருந்து போல் வாரும் உண்டு.**

**பொருள் :** *வியாதி நம்முடனேயே பிறந்து நம்மைக் கொன்று விடுகிறது. எனவே உடன் பிறந்தோர் எல்லோரையும் நம் உறவு என்று நினைக்க முடியாது. உடன் பிறக்காது எங்கோ பெரிய மலையில் இருக்கும் மருந்து நம் வியாதியைத் தீர்ப்பது போல அன்னியரும் நமக்கு நன்மை தருபவராக இருக்கக் கூடும்.*

**விளக்கம் :** *நமக்கு வரும் நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்று நோய் போன்றவியாதிகள் நம்மோடு உடன் பிறந்தவை. அவை வெளியிலிருந்தோ, பிறரிடமிருந்தோ தொற்றுபவை இல்லை. அந்த பிணிகளை போக்க எங்கோ ஒரு மலையில் பிறந்த மூலிகை பிணி தீர்க்கும் மருந்தாக பயன்படுகிறது. அதேபோல் நம் உடன் பிறந்தவர்களும், சுற்றத்தாரும், நம்முடைய பல இடர்களுக்கும், துன்பங்களுக்கும் காரணமாய் இருந்து நம்மை நட்டாற்றில் தவிக்கவிட்டு ஓடிவிடுவார்கள். ஆனால் எங்கோ பிறந்தவர்கள் நட்பு என்றபெயரில் நம்முடைய துன்ப காலத்தில் தோள்கொடுத்து நின்று உதவுவார்கள். உற்றநல் மருந்தாக உடன் இருந்து உயிர் காப்பார்கள். உறவு என்று அதிகமாக நெருங்கக்கூடாது, அயலார் என்று விலகி ஓடக்கூடாது.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *16/63*

## 16. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் (சித்திரை – சுவாதி)

காஞ்சிபுரத்தில் அவதரித்த சலவைத் தொழிலாளியான ஒரு நாயனார் சிறந்த சிவபக்தர். சிவனடியார்களுக்கு இலவசமாகத் துணி துவைத்துக் கொடுக்கும் தொண்டினைச் செய்துவந்தார். அவருடைய இயற்பெயர் என்ன என்று தெரியவில்லை. ஆனால் அவர் அடியார்களின் குறிப்பை அறிந்து தொண்டு புரியும் இயல்புடையவராக இருந்ததால் அவரை யாவரும் **"திருக்குறிப்புத் தொண்டர்"** என்றே அழைத்தார்கள்.

ஒருவருக்கு பொருளை வழங்குவதைவிட உடலுழைப்பை வழங்குவது உயர்ந்தது. திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்களிடம் தமக்குள்ள பக்தியை அவர்களுடைய ஆடைகளை வெளுப்பதில் காட்டினார். அவர் தொழிலிலும் தொண்டு செய்யும் இடம் இருந்தது.

திருகுறிப்புத் தொண்டரை உலகத்துக்கு அறிவிக்க இறைவன் சிவபெருமான் விரும்பினான். தன் தொண்டருடைய பெருமையை ஒரு சோதனையின் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டான். அது ஒரு மாரிக்காலம். திடீர் திடீரென்று மழை பெய்து கொண்டிருந்தது. பூமி குளிர்ந்து குளிர் நடுக்கியது. அப்போது சிவபெருமான் ஒரு சிவனடியார்போல் வேடமிட்டு அழுக்கேறிய ஆடையை அணிந்து நாயனாரிடம் வந்தார்.

திருநீறு பூசிய அழுக்கு கோலத்துடன் வந்த

அடியாரைக் கண்டவுடன் மனம் மகிழ்ந்த திருக்குறிப்புத் தொண்டர் அவரைப் பணிந்து “சுவாமி இந்த ஆடையைத் தாருங்கள் நான் நன்றாக வெளுத்துத் தருகிறேன்” என்று கூறினார். அதற்கு அடியார் வேடத்தில் இருந்த சிவபெருமான் “சரி தருகிறேன். ஆனால் இன்று மாலை சூரியன் விழுவதற்கு முன் வெளுத்து உலர்த்தித் தரவேண்டும். அப்படி தராவிட்டால் என் உடம்பிற்குத் தீங்கிழைத்த கொடுமைக்கு ஆளாவாய்” என்று கூறி ஆடையைக் கொடுத்தார்.

ஆடையைப் பெற்றுக்கொண்ட நாயனார் அதை பிரித்து வெளுக்க ஆரம்பித்தார். அதற்குள் பலத்த மழை வந்துவிட்டது. நேரம் ஆகிக்கொண்டே இருந்தது. மழையும் நிற்கவில்லை. மாலை நேரமும் வந்துவிட்டது. துணி உலரவில்லை. சிவனடியாரின் மேனிக்குத் துன்பம் இழைத்த நான் இருந்து என்ன பயன்?. அடிகளார் வருவதற்கு முன்பே நாம் உயிரை விடுவதே சரி என்றெண்ணி துணி துவைக்கும் கல்லில் தம் தலையை மோதிக்கொள்ள போனார்.

சோதனை செய்த அருளாளனாகிய ஆண்டவன், தன் பிள்ளை அந்த சோதனையில் வெற்றி பெற்றுவிட்டான் என்பதைக் கண்டு தன் கரத்தால் தன் பக்தனின் தலையைத் தாங்கி பிடித்தார்.

மேகங்கள் மறைந்தன, வானம் வெளிவாங்கியது. சிவபெருமான் உமாதேவியோடு காட்சி அளித்து தன் பக்தனை நோக்கி “உலகம் முழுவதும் உன்னுடைய திருத்தொண்டின் பெருமையை உணர்ந்து கொள்ளும்படி அறிவித்தோம். நீ நம்முடன் இருந்து இன்புறுவாயாக” என்று அருள் புரிந்தார்.

நாயனார் பிறர் குறிப்பறிந்து சேவை செய்ததால்

அன்று முதல் **"திருக்குறிப்புத் தொண்ட நாயனார்"** என்று போற்றப்பட்டார்.



இவர் சித்திரை மாதம் சுவாதி நக்ஷத்திரத்தில் இறைவன் திருவடியை அடைந்தார்.

நாயன்மார்கள் கதை தொடரும்......

## வேதபாரதி
## வங்கி கணக்கு எண்கள் விபரம்

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010005286<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

## வேதபாரதி செய்திகள் புத்தக
## வங்கி கணக்கு எண்கள் விபரம்

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| *வருட சந்தா* | *ரூ.200* |
| *10 வருட சந்தா* | *ரூ.1500* |

*வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட*

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

# ஏன்? எதற்கு? தெரிந்துகொள்வோம்

## 4. பூனை குறுக்கே சென்றால் அது அபசகுனமா?

ஒரு சிலர் வீட்டை விட்டு வெளியே புறப்படும்போது நல்ல சகுனம் பார்ப்பார்கள். அப்படி பார்க்கும் போது பூனை குறுக்கே போனால் அதை அபசகுனம் என்றும், போகும் இடத்தில் விரும்பத்தகாத ஒன்று நடக்கும் என்று நினைத்து தொடர்ந்து போவதை தவிர்த்துவிடுவார்கள் அல்லது வேறு யாராவது அப்பாதையைக் கடந்து சென்றவுடன் தாங்கள் செல்வார்கள்.

பூனை நம் பாதையில் குறுக்கே வந்தால் அது எந்த தீங்கையும் விளைவிக்காது. அதை கெட்ட சகுனமாகக் கருதவேண்டாம். பின்பு இந்த பழக்கம் எப்படி வந்தது?

பூனைகள் எப்போதும் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியில்தான் இருக்கும். அந்த காலத்தில் மன்னர்கள் போருக்கு படை திரட்டிச் செல்லும் வழியில் பூனையைப் பார்த்தால் “இந்த வழியில் குடியிருப்புகள் இருக்கிறது, அங்கே இருக்கும் ஆண்மகன்கள் அனைவரும் போர்க்களத்திற்கு சென்றிருப்பார்கள், அங்கே சிறுவர்கள், பெண்கள், வயதானவர்கள் மட்டுமே இருப்பார்கள். ஆகவே அந்த வழியாகச் சென்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் அதனால் பூனை குறுக்கே போனால் அந்த வழியே போகக்கூடாது என்பதற்காக வந்த திசையை மாற்றி வேறு திசையில் செல்வார்களாம்.

நம் முன்னோர்கள் சொல்லி வைத்த இதுபோன்றபல விஷயங்களை காரணம் தெரியாமல் நாம் தவறாக கடைபிடிக்கிறோம்.

**-பகலவன்**



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## வேத ரக்ஷணம்

துவேஷம், மனக்கசப்பு, கோபதாபங்கள் போக வேண்டுமானால், வேத ரக்ஷணம் என்கிறகடமையைப் பெற்றவர்கள் அதைச் செய்து, ஸாதுக்களாக, சாந்தர்களாக வாழ்ந்து காட்ட வேண்டும். இதன் பலன் மற்றவர்களுக்கு உடனே புரியாமல் போகலாம். ஹர்த்தால் வந்து கடைகளை மூடினால் உடனே சிரமம் தெரிகிறமாதிரி, வேத ரக்ஷணம் நிற்பதனால் ஏற்படும் சிரமம் சமூகத்துக்குத் தெரியாமல் போகலாம். ஆனால் உண்மையில் இது நின்று போவதால் ஏற்படுகிற நஷ்டமே பெரிசு. இது நாளாவட்டத்தில் புரிந்துவிடும். வேத ரக்ஷணத்துக்காக என்றே சிலர் ஆயுசை அர்ப்பணித்து வாழ்வதில் பெரிய சமூகப் பிரயோஜனம் இருக்கிறது என்று எல்லாரும் காலப்போக்கில் உணர்வார்கள். கடமையில் பின்வாங்காமலே நின்றால், ஒரு நாள் இப்போது எத்தனைக்கெத்தனை துவேஷம் இருக்கிறதோ அத்தனைக்கத்தனை பிரீதி உண்டாகத்தான் செய்யும்.

ஆதியில் மனு இருந்ததே தமிழ் நாட்டில்தான். இங்கே தான் வேத வித்யை, ஞானம், பக்தி எல்லாமே ரொம்பச் செழிப்பாக இருந்திருக்கிறது. த்ரவிடேஷு பூரிச; என்பார்கள். தமிழ்நாட்டில் தாயுமானவர், பட்டினத்தார் போன்றவர் தான் என்றில்லை; மதாந்தரங்களைச் சேர்ந்த வேதநாயகம்பிள்ளை, மஸ்தான் சாகிப் போன்றவர்கள் கூட தமிழ்நாட்டு மண்ணின் விசேஷத்தால் பரம வேதாந்திகளாக இருந்திருக்கிறார்கள்.

தொடரும்..

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை



### கர்ம யோகம் — 2

தினமும் இறைவனுக்குப் பூஜை செய்வதைத் தனது பழக்கமாகக் கொண்டிருந்தான் ஒரு பக்தன். பூஜையில் அவன் பழங்களையும் சில தின் பண்டங்களையும் இறைவனுக்குப் படைத்து வந்தான். பூஜை முடிந்த பிறகு, தான் நைவேத்தியம் செய்த பழங்களுள் ஒன்றை எடுத்து, அதை இறைவனின் பிரசாதமாகக் கருதி சாப்பிடுவான். 'சிருஷ்டியைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அறிந்து கொள்வது என்பது இயலாதது' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஒருவன் அப்பக்தனுக்கு நண்பனாக இருந்தான். அவன் அப்பக்தனிடம், 'நீ பூஜையில் செய்யும் நைவேத்தியம் முட்டாள்தனமானது. இறைவனின் முன்பு நீ படைக்கும் பழங்கள் அப்படியே வைத்த இடத்திலேயேதான் இருக்கின்றன. பார்ப்பதற்கும் அவை எந்தவித மாறுதலையும் அடைவதில்லை. மேலும், நீதான் அப்பழங்களைச் சாப்பிடுகிறாயே தவிர, நீ பூஜை செய்யும் உன்னுடைய இறைவனல்ல' என்று கேலி செய்தான்.

பக்தன் தன் நண்பனைப் பார்த்து, 'கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அளித்த வாக்குறுதிப்படி, அவர் நிச்சயமாக பக்தனின் காணிக்கையை ஏற்றுக்கொள்கிறார் என்ற திட நம்பிக்கையுடன் தான் நான் இறைவனுக்குப் பழத்தை அளிக்கிறேன்.

தொடரும்...

# ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இலவச முதியோர் இல்லம்



செங்கல்பட்டு மாமண்டூரில் **26.04.2024** அன்று **ஸ்ரீ மாதா டிரஸ்ட் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மாமா அவர்களின் சீரிய முயற்சியினால் நிறுவியுள்ள ஆதரவற்ற முதியோர் இல்லம் துவக்க விழா நிகழ்ச்சி** நடைபெற்றது. வேதபாரதி சார்பில் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




ஸ்ரீ சாய் பேலஸ்

SHRI SAI PALACE

Marriage Hall | Banquet Hall | Terrace Party Space

Cell : 89256 69998 / 95661 13347



Facilities Offered :

- 800 Capacity
- 350 Seats in Hall
- 120 Dining Seats
- 9 A/c Rooms
- Centralised A/c
- Double Lift Facilities
- Kitchen & Utensils
- Pure Vegetarian
- Dedicated Parking for 50 Cars
- Power Back-Up
- Uninterrupted Events

No.8A, Nagappa Avenue, Thiruvalluvar Street,
Vadakkupattu, Medavakkam, Chennai - 600 100.
e-mail : events@shrisaipalace.com
web : www.shrisaipalace.com

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்


வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
WOPPER
Fluid Chemistry

## மஹிமையான பொருட்கள்



### 3. பூஜை மணி

**“மணி”** என்பது ஒலியை எழுப்பக்கூடிய ஒரு கருவி. மக்கள் எதையாவது எச்சரிக்க இதைப்பயன்படுத்துவார்கள். பொதுவாக மணிகள் வெங்கலத்தால் வார்க்கப்படுகின்றன.

மணி சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பே உபயோகத்தில் வந்துள்ளது. மணியை ஆங்கிலத்தில் BELL என்போம். இது “பெல்லே” என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து வந்தது.

உலகின் எல்லா நாடுகளிலும் மணிகள் உள்ளன.

இந்தியாவில் உள்ள எல்லா இந்து கோயில்களிலும் வழிபாட்டின் போது மங்கல ஒலி எழுப்பும் இசைக் கருவிகளில் ஒன்றாக **“மணி”** விளங்குகிறது. இறைவழிபாட்டில் மணி என்பது இறைவனோடு பிரிக்க முடியாத ஒன்று. கடவுளுக்கு தீபாராதனை காட்டும்போது கோயில் குருக்குள் கையில் ஒரு மணி வைத்திருப்பார். இதை **“கை மணி”**, **“கொத்து மணி”** என்று அழைப்பார்கள்.

**வீடுகளில் பூஜையின்போது உபயோகப்படுத்தும் மணி :** சிவனை வழிபடுபவர்கள் உபயோகிக்கும் பூஜை மணியின் கைப்பிடியின் உச்சியில் நந்தியின் வடிவம் இருக்கும். வைஷ்ணவர்கள் உபயோகிக்கும் மணியில் கருடன் அல்லது அனுமான் வடிவங்கள் இருக்கும். காளியை உபாசிப்பவர்கள் மணியில் “திரிசூலம்” இருக்கும்.

பூஜை மணியை உபயோகப்படுத்துவதில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அவை

1. மணிகள் பித்தளை அல்லது வெங்கலத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. பூஜை மணியை தரையில் வைக்கக்கூடாது. ஒரு பித்தளை அல்லது செப்பு தட்டில்தான் வைக்க வேண்டும்.
3. பூஜை நேரம் தவிர மற்றநேரங்களில் மணியை அடிக்கக்கூடாது. குழந்தைகள் பூஜை மணியை அடிக்க அனுமதிக்கக்கூடாது.
4. கடவுளுக்கு தூபம், தீபம் காட்டும்போதும் நெய்வேத்யம் செய்யும்போதும் மணியை வலது கையால் எடுத்து இடது கையில் மாற்றிக்கொள்ள வேண்டும். இடது கையால் தூக்கக்கூடாது.
5. பூஜை மணியில் தேவர்கள் வசிப்பதாக ஐதீகம். ஆகையால் பூஜை செய்யும்போது மணியை நம்முடைய மார்பிற்கு நேராகத்தான் பிடித்து அடிக்க வேண்டும்.
6. மணி அடிப்பதிலும் ஒரே மாதிரியாக அடிக்கக்கூடாது.
   அ. மணியை மெதுவாக அடித்தால் இறைவனுக்கு தூபம் சமர்ப்பிக்கப்படுகிறது. என்று பொருள்.
   ஆ. இரண்டு பக்கமும் விசேஷமாக அடித்தால் திருமஞ்சனம் நடக்கிறது என்று பொருள்.
   இ. மெதுவாக சீராக அடித்தால் நைவேத்யம் செய்யப்படுகிறது என்று பொருள்.
7. பூஜை மணியின் அதிதேவதை – வாசுதேவர்
   மணியின் நாக்கின் அதிதேவதை – சரஸ்வதி
   ஒலித்தலின் அதிதேவதை – சூரியன்
   நாதத்துக்கு அதிபதி - ஈஸ்வரன்

*பூஜை மணிக்கும் பூஜை செய்ய வேண்டும் எப்படி?*

பூஜை முடிந்ததும் மணி அடிப்பதற்கான வேலை இல்லை என்றவுடன் மணியை ஒரு தாம்பாளத்தில் வைத்து மணியின் மேல் உள்ள தெய்வ வடிவத்திற்கு சுத்தமான ஜலம் விட்டு அபிஷேகம் செய்து சந்தனம் குங்குமம் இட்டு புஷ்பம் வைத்து சிறிது அன்னமும் பருப்பும் வைத்து நைவேத்யம் செய்து அதைக்கொண்டு போய் காகத்திற்கு வைக்க வேண்டும். ஆனால் இந்த மணிக்கு தனியாக தீபாராதனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

*பூஜை மணிக்கான மந்திரம் :*

**ஆகமார்த்தம் து தேவாநாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் /**
**கண்டாரவம் கரோம்யதௌ தேவதாஹ்வான லாஞ்ச்சனம்//**

**பொருள் :** "தேவர்களை வரவேற்பதற்காகவும், பூஜை செய்யுமிடத்தில் இருக்கும் கண்களுக்கு புலப்படாத தீய, அசுர சக்திகளை விலக்குவதற்காகவும் இந்த மணியோசையை எழுப்புகிறேன்.


**பகலவன்.**

## வாழ்த்துக்கள்

வேதபாரதியின் வேதபாராயண குழு உறுப்பினர்
ஸ்ரீ K. சந்திரசேகரன் - ஸ்ரீமதி சாவித்ரி தம்பதியினர்
குமாரத்தி **சௌ.ஸ்ரீஸ்ருதி**
கடலூர் G. நடேசன் - ஸ்ரீமதி. நித்யா குமாரன்
**சிரஞ்சீவி.ராமச்சந்திரன்**

இவர்களின் திருமணம் **15.04.2024 திங்கட்கிழமை** தி.நகர் **ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமி கல்யாண மண்டபத்தில்** சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதி சார்பில் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-8 வேதங்களில் விஞ்ஞான உண்மைகள் தொடர்ச்சி :*

*இந்த ஆய்வுகளின் பின்னணியில் ப்ரிஹறதாரண்யக உபநிஷத்தின் வேதவாக்கியத்தை இப்பொழுது காண்போம். 'ஆன்மா, வலது கண்ணில் உறைகிறது. அதனால், அது 'தக்ஷிணாக்ஷிபுருஷன்' என அழைக்கப்படுகிறது. அது உலகங்களெல்லாவற்றையும் மனிதனின் ஆசைகளையும் ஆள்கிறது'. இந்த மந்திரங்கள் ப்ரஹ்மசூத்ரத்தில் விவாதிக்கப்படுகின்றன. ஆன்மாவின் இருப்பிடம் மூளையேயானாலும் அதன் செயல்களெல்லாம் தெளிவாக வெளிப்படுவது கண்ணில்தான்; அதனால், ஆன்மா 'தக்ஷிணாக்ஷி புருஷன்' என்று அழைக்கப்படுகிறது என்பது தெளிந்த முடிவு. ஆக்ஷிப்புருஷனின் இருப்பிடம். வேதங்களில் சொல்லப்பட்டது போல, வலது கண்ணில் அமைந்திருப்பது மனித அறிவுக்கு எட்டாத மர்மமே.*

*கிருஷ்டியில் முதலில் ஏற்பட்டது எது? விதையா, மரமா? ஆய்வுக்குப்பின்னர், முதலில் தோன்றியது மரமே என்று தாவரவியல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த அடிப்படையில், விதையின் மூலமாக அல்லாமல், ஒரு மரத்தின் பகுதி மூலமாகவே இன்னொரு மரம் தோற்றுவிக்கும் வழிகளை அவர்கள் கண்டுள்ளனர். அது* "Tissue Culture" *எனப்படும்.*

தொடரும்..

# பூக்களோடு பேசுவாம்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“

## மகாபாரத பூ எனும் கிருஷ்ணகமலம்



*சிவனுக்குரிய மலரைப்பற்றிப் பார்த்தோம். பூக்களோடு நீங்களும் பேசிக்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். சிவனுக்குரிய நாகலிங்கப் பூவை தெரிந்திருக்கும் அளவிற்கு கிருஷ்ணகமலப் பூவை நாம் அறிந்திருக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் இது பூக்கடைகளில், பூ சந்தையில் கூட கண்களில் படுவதில்லை. தாவரவியல் மாணவியாக இருந்தபோது கூட நான் இதனை* PACIFLORA *என்றேபடித்திருந்தேன். அதன் ஆன்மீக பெயர் “கிருஷ்ண கமலம்” என்று தெரிந்திருக்கவில்லை. தென் அமெரிக்காவை பிறப்பிடமாகக்கொண்டது இந்த மலர் என்றாலும், பாரதத்தில் மகாராஷ்ட்ராவில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. ஆனால் இப்போது இந்தப்பூ, அனைத்து இந்திய மாநிலங்களிலும் தோட்டங்கள் மற்றும் வீடுதோறும் மிகவும் ஆர்வத்துடன் வளர்க்கப்படுகிறது. இதற்கு காரணம் இதன் ஆன்மீக முக்கியத்துவம். நர்சரிகளும் இதனை சிறந்த வர்த்தக மலராக ஆக்கிவிட்டன. இதன் மலர் அமைப்பு சிறியதாக இருந்தாலும் மிகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது. மகாபாரத பூ என்றால் சிக்கலுக்கு பஞ்சமாகவா இருக்கும்?*

*கிருஷ்ணகமலம் என்று அழகான பெயரை யார் சூட்டினார்கள்? மராட்டியர்கள் என்று சொல்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ணரின் கையில் உள்ள சுதர்சன சக்கரத்தை போல் உள்ளதுடன், ஸ்ரீ*

கிருஷ்ணரின் நீல நிறத்தையும் நினைவூட்டுவதாக உள்ளது. கத்தரிபூ நிறம் என்று சொல்லலாம். சங்கு புஷ்பத்தைப் போல், சிவப்பு நிறம் உள்பட வேறு சில வண்ணங்களிலும் இந்த பூ மலர்ந்து மனதை கொள்ளை கொள்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிடித்த மலர் என்று வட இந்தியாவில் கொண்டாடுகிறார்கள்.

மகாபாரத பூ என்று ஏன் அழைக்கப்படுகிறது? உள்ளங்கையில் வைத்து உற்று நோக்கினால் வெளிவட்டத்தில் 100 கத்தரிபூ நிறஇதழ்கள் உள்ளன. இவை கௌரவர்களையும், அதன் உள்ளே மஞ்சள் நிறத்தில் ஐந்து மகரந்ததாள்கள் அமைந்து பாண்டவர்களையும் அவர்களுக்கு மத்தியில் இளம்பச்சை நிறத்தில் ஒற்றையாக காட்சிதரும் பூவின் சூல் பாகம் திரௌபதியையும் குறிக்கும் என்றும் சொல்லப்படுகிறது. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்த இந்த மலரின் அமைப்பு ஸ்ரீ கிருஷ்ணரின் சுதர்சன சக்கரத்தை ஒத்தும் இருக்கிறது என்பதால் இதனை மகாபாரத பூ என்று அழைக்கிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனின் பேரன்பை நாம் பெறவேண்டும் என்றால், இந்த மலரை நம் வீட்டில் துளசியுடன் கூடிய துளசி மாடத்தின் அருகே மண் தொட்டியில் ஆசையுடனும், அக்கறையுடனும், பக்தியுடனும் வளர்த்து வந்து, தினம் ஒரு கிருஷ்ணகமல மலரை, ஸ்ரீ கிருஷ்ணரின் பாதங்களில் வைத்து வழிபட வேண்டும்.

இதன் மருத்துவ பலனும் அபாரம். இதனிலிருந்து வெளிப்படும் நறுமணம் மன அழுத்தத்தை குறைப்பதுடன், மருத்துவரின் ஆலோசனையுடன் குறிப்பிட்ட அளவில் எடுத்துக் கொள்ளப்படும் இதன் சாறு, போதை பழக்கம், ஆஸ்துமா போன்றநோய்களைக் கட்டுப்படுத்துமாம். கொடி வகையைச் சார்ந்த இந்த மலரை சுலபமாக பதியன்

போட்டு வளர்த்து விடலாம் என்கிறார்கள். கிருஷ்ணகமலம் மலரும் போதே பரவும் அபார நறுமணம் வீட்டிற்குள் சிறந்த அதிர்வலைகளைப் பிறப்பிக்கும் என்பதும் ஆய்வுகளால் நிரூபிக்கப் பட்டுள்ளது. இதனைப் படித்துவிட்டு, யாராவது வளர்க்கத் தொடங்கினால் அவசியம் தெரியப்படுத்துங்கள். சிவனுக்கும், மகாவிஷ்ணுவான ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பிடித்த மலர்களைப் பார்த்துவிட்டோம்.

*அடுத்து படைப்புக் கடவுளான ப்ரும்மாவுக்குரிய “ப்ரும்ம கமலம்” பற்றிப் பார்ப்போம்.*

## ஸந்த்யா வந்தன முகாம் 2024

*சென்னை, துரைப்பாக்கம் APL குளோபல் பள்ளியில் ஸந்த்யா வந்தன பயிற்சி முகாம் மற்றும் வேதபாராயண முகாம் ஏப்ரல் 27, 28 தேதிகளில் நடைபெற்றது. விரிவான கட்டுரை அடுத்த இதழில்.*



# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 41

இன்று கல்லூரியிலிருந்து வெளிவரும் பொழுதே 'SWOT' என்பதைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள்.

இன்று 'SWOT' என்பதைப் பற்றி அனைவரும் "கூகுளில்" தேடி அறிந்து கொள்ளலாம். நீங்களும் சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

S –Strength – பலம்

W –Weakness – குறை

O –Opportunity – வாய்ப்பு

T –Threats – எச்சரிக்கையாகயிருப்பது

**"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்".** *(அதிகாரம் – 62 குறள் – 611)*

"ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன், இச்செயல் செய்வதற்கு கஷ்டமானது என்று எண்ணி சோர்வு அடையக் கூடாது. அதேசமயம் அச்செயலுக்கான முயற்சி பெருமையைக் கொடுக்கும்" என்கிறார் திருவள்ளுவர்.

வள்ளுவர் பெருமான் கூறியதைத் தான் இன்றைய "ஸாஃப்ட் ஸ்கில்" (Soft Skill), "மேனேஜ்மெண்ட்" (MANAGEMENT) என்று பல மாணவர்களுக்கு அளிக்கின்றது.

தன் பலத்தையும், தன் குறையையும் புரிந்து கொள்ள தன்னைத் தானே அறிதல் எனும் "செல்ஃப் அன்டர்ஸ்டாண்டிங்", (SELF-UNDERSTANDING),

“செல்ஃப் அனாலிசிஸ்” (SELF-ANALYSIS) எனப்படும் தன்னைத்தானே உள்நோக்கி ஆய்வு செய்தல், “ஃபேஸிங் ஃபெய்ல்யூர்ஸ்’’ (FACING FAILURES)எனப்படும் தோல்வியை எதிர்கொள்ளுதல் ஆகிய முயற்சிகள் தேவை.

'OPPORTUNITY' எனப்படும் “வாய்ப்பு” 'GOAL SETTING' எனப்படும் “குறிக்கோளையும், 'MOTIVATION' எனப்படும் “ஊக்கத்தை”யும் அளிக்கின்றது.

'THREAT' எனப்படும் “எச்சரிக்கை உணர்வு” பயத்தை அளிக்கக் கூடாது. அதற்கு பதிலாக 'Positive Thinking' எனப்படும் “நேர்மறைஎண்ணங்களை“ உருவாக்க வேண்டும்.

பெற்றோர்களாகிய உங்களுக்கு இந்த வகையில் 'SWOT' ஐ அறிந்து, புரிந்து கொண்டால் உங்கள் பிள்ளைகளை வேலையில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் வெற்றி பெறச் செய்யலாம்.

இவற்றையெல்லாம் அவர்களை உட்கார வைத்து போதிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் வேலையிலோ, வாழ்க்கையிலேயோ பிரச்சனைகள் எதிர்கொண்டு அதைச் சமாளிக்க தெரியாமல் அவதியுறும் பொழுது மிகக் குறைவான வார்த்தைகளில், “நீ படித்ததை இங்கு உபயோகித்து பார்” என்று கூறவேண்டுமே தவிர, “என் காலத்தில்... நான் என்ன பண்ணினேன் தெரியுமா...?” போன்றவார்த்தைகளை தவிர்த்து விடுங்கள்.

'SWOT' உடன் இணைத்து மொத்தம் 6 முக்கியமான “வாழ்க்கை திறன்களை“ (Life Skills) பற்றிக் கூறியுள்ளேன்.

1) SELF-UNDERSTANDING -- தன்னைத் தானேயறிதல்
2) SELF-ANALYSIS- தன்னை உள்நோக்கி ஆய்வு செய்தல்
3) FACING FAILURES- தோல்வியை எதிர்கொள்ளுதல்
4) GOAL SETTING- குறிக்கோள் அமைத்தல்
5) MOTIVATION - ஊக்கம்
6) POSITIVE THINKING—நேர்மறைஎண்ணங்கள்

இவையனைத்துமே பணிக்கு செல்வதற்கு முன்பே உங்கள் குழந்தைகள் அறிவதற்கான சாத்திய கூறுகள் இன்றைய காலகட்டத்தில் உண்டு.

அறிவது வேறு, உணர்ந்து, புரிந்து செயல்படுவது வேறு. பெற்றோர்களாகிய நீங்கள் இதை பல சமயங்களில் உணர்ந்து செயல்பட்டிருப்பீர்கள்.

அவர்கள் உங்களைத் தேடி பணியில் பிரச்சனை, குழப்பம் என்று வரும் பொழுது நீங்கள் எடுத்துக் கூறவேண்டும். உங்கள் தவறுகளைப் பற்றி தயங்காமல் கூறுங்கள். உங்களை உற்றநண்பனாக மாற்றிக் கொள்ள அவர்களுக்கு இது சரியான தருணம்.

நீங்கள் தான் மாறத் தயாராக இருக்க வேண்டும்.

தொடரும்...

**பதிகம் பாடுதல் நிகழ்ச்சி - 09.04.2024 செவ்வாய் கிழமை**

திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரர் ஆலயத்தில் மயிலாடுதுறை, குத்தாலம் மற்றும் அநேக ஊர்களில் இருந்து சுமார் 300 குழந்தைகள் கலந்து கொண்டு பதிகம் பாடுதல் நிகழ்ச்சி குத்தாலம் ஸ்ரீமதி. ஜானகி மாமி ஏற்பாட்டில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் கலந்துகொண்டு பங்குபெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். வேதபாரதி பொறுப்பாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணன், ஸ்ரீ வெங்கட்ராமன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வீடு பார்க்கும் படலம்

*சென்றமாத தொடர்ச்சி...*

*எங்களுக்கு அவர் சுவற்றில் மாட்டி இருந்த படங்கள் கண்ணுக்கு பட்டது. ஒரே வரிசையில் 3 ஜனாதிபதிகளிடம் விருது வாங்கிய படங்கள்.*

*நாங்கள் கவனிப்பதை பார்த்துவிட்டு*

"I was a Major General, *இந்தியா முழுக்க சுத்தி இருக்கேன் பல பாஷைகள், பல வித மனிதர்கள், நாலு வருஷம் முன்னாடி சென்னைல* settle *ஆனோம். எங்களுக்கு ஒரே பையன்.* He is a Chief *அவன் இப்போ உலகம் முழுக்க வலம் வரான்.* I lost my wife last year.

*இந்த வீட்ல உள்ள எல்லாமே என்* wife *ஓட கைவண்ணம் தான்.*

*அப்பொழுது தான் அவரின் மனைவியின் படத்தைக் கண்டோம். அன்று பூத்த மலர்கள் அவர் படத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது.*

*'சரி உங்களை பத்தி சொல்லுங்க' என்றார்.*

*நாங்கள் பேசியதை உன்னிப்பாக கேட்டார். அவர் கண்களில் தன்னுடைய கடந்த காலத்தின் மிச்சத்தை ஏதோ எங்களுள் தேடியது போல தோன்றியது.*

*பேச்சு அங்கே இருந்து வேறு வேறு திசைகளில் கல்வி, அரசியல், பொருளாதாரம், சினிமா, பழைய பாடல்கள் என எங்கெங்கோ ஓடியது. இதற்கு நடுவே தேநீரும், அதோடு நிற்காமல் தேநீருடைய வரலாறும். சில மணி நேரங்கள் போனதே தெரியவில்லை.*

*நாங்களும் வீடு பார்க்க வந்ததை மறந்து, ஒரு மூத்த இளைஞரின் வாழ்க்கைக்குள் சில தருணங்களை அனுபவித்தோம்.*

"I am so happy that I met you both today" *என்றார்.*

*'இன்னும் எனக்கு என்ன வேலை இருக்கு தெரியுமா, லன்ச் செய்யணும், அப்புறம் என்னோட*

*புத்தகங்கள், எத்தகு* books *இருக்குனு பார்க்கறீங்களா, எல்லா* book*ல யும்* underline *பண்ணிருப்பேன், நான் மானஸீகமா அந்த ஆசிரியருக்கு கொடுக்கிற பாராட்டு அது. இதுல எந்த புக்ஸ் வேணும்னா எடுத்துக்கோங்க,* if you guys want to read".

*'அப்புறம் நான் ரொம்ப எதிர்பாக்கற* evening walk, *அது கழிஞ்சு சரியா 7 மணிக்கு எனக்குனு நேரம் ஒதுக்கற ஒரு ஜீவன் இருக்கு. இவங்க பாலா, இந்த* community *ஒட* all in all. *என்கூட வந்து 10 நிமிஷம் பேசிட்டு தான் வீட்டுக்கு கிளம்புவார். கீழ அங்க ஒரு பெஞ்ச் இருக்கும் பாருங்க, அங்க தான். அவர் கூட பேசணும்னே அன்றைய விஷயங்களை வாசிச்சு வச்சுப்பேன். பல நாட்கள் என்னோட ஒரே உரையாடல் பாலாவோட மட்டும் தான் இருக்கும். 'லேசான புன்னகையோடு கூறினார்.*

*ஒரு நாளில் ஒரே ஒரு நபரிடம் பேசுவதற்கு ஆவலாக எதிர்பார்த்து கொண்டிருக்கும் மனிதரை நாங்கள் இன்று வரைகண்டதில்லை. அந்த நிமிடம் இது வரை நாம் தொலைத்து விட்ட மனிதர்களையும், நிக்காமல் எதை நோக்கியோ ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கையும் பட்டெனு வந்து சென்றது.*

*வீடை இன்னொரு முறை சுத்தி பார்த்தோம். கிருஷ்ணன் நாயரிடம் இருந்து விடைப்பெற்று கொண்டோம்.*

*லிப்ட்டில் வரும் பொழுது ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை.*

*நடந்து சென்ற பாதையில் இருந்து மஞ்சள் நிற பெஞ்சும், அதன் மேல் விழுந்த மலர்களும் கிருஷ்ணன் நாயருக்கு காத்துக்கொண்டிருந்தது.*

*இந்த வீட்டை வாங்குவோமா???*

*முற்றும்.*

**வெ.சிவசங்கரி**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*சீதையின் அலறலைக் கேட்டு ஜடாயு ஓடி வந்து இராவணனுடன் கடுமையாகப் போரிடுகின்றது. இராவணனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை ஜடாயுவுடன் இறுதியில் குரூர புத்தி கொண்ட இராவணன் பறவையின் முக்கிய அங்கமான சிறகை வெட்டி ஜடாயு மேலே பறந்து எதுவும் செய்ய முடியாமல் தடுத்தான். ஜடாயுவும் சிறகொடிந்த பறவையாய் கீழே விழுந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தது.*

*ஒரு பெண்ணுக்கு ஆபத்து என்றால் ஜடாயு போன்றஒரு பறவை எப்படி தனது உயிரைப் பணயம் வைத்துப் போராடியதோ ஆறறிவு கொண்ட மனிதர்கள் தன்னைச் சுற்றியுள்ள பெண்ணுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலோ அல்லது அக்கிரமம் நடந்தாலோ தட்டிக் கேட்க வேண்டும். அதை தடுக்க முன்வர வேண்டும்.*

*பிறகு எந்தவித இடையூறுமின்றி இராவணன் சீதையை இலங்கைக்கு எடுத்துச் சென்று அசோக வனத்தில் சிறையிட்டான். பஞ்ச பூதங்களும் நடுங்கின. கதறின, தர்மம் அழிந்தது சத்தியம் மறைந்தது, நீதி நெறி கருணை எல்லாம் அழிந்தது. பல பிராணிகள் கண்ணீர் விட்டு அழுதது. சீதை போகும் போது அங்கிருந்த இயற்கை வளங்கள், பட்சிகள், மிருகங்களிடம் கதறி "இராமன் வந்தால் விஷயத்தை சொல்லுங்கள்" என்று கூறி அழுதாள் கடைசியில் தனது ஆபரணங்களை ஒரு துணியில் மூட்டையாக கட்டி ஒரு மலைப்பகுதியின் கீழே போட்டாள்.*

*ராவணன் சிறிதும் இரக்கமின்றி சீதையைப் பிடித்துக்கொண்டு தன் அழிவை நோக்கிப் போய்க்*

கொண்டிருந்தான். சீதை தலையில் சூடியிருந்த மலர்கள் அங்கும் இங்கும் சிதறின. ராவணனின் சம்பத்தும் (செல்வமும்) இதேபோல் சிதறி விழும் என்பதைக் காட்டுவதுபோல் இருந்தது.

இலங்கை சென்ற ராவணன் முதலில் தனது பிரதாபங்களைப் பேசினான். பிறகு தத்ரூபமாக காட்டினான். அவனது அரண்மனையில் எங்கும் பொன், வைரம், நவரத்தினங்கள், சீதை தனது பயத்தை வெளிக்காட்டாமல் தனது கற்பின் சக்தியால் இராவணனை நீசமாக பார்த்து அவனுக்கும் தனக்கும் இடையே துரும்பைக் கிள்ளிப் போட்டு தைரியமாகப் பேசினாள். “நீ என்ன வீரன், கோழை போல் என் கணவன் இல்லாத நேரத்தில் என்னை அபகரித்து வந்திருக்கின்றாய், உனக்கு மரணம் நெருங்கிவிட்டது. எனது கணவர் ஸ்ரீராமர் தர்மம் காப்பவர். அவரால் உனக்கு மரணம் நிச்சயம். நீ செய்த தீவினை உன்னையும் உன் இலங்கையையும் விரைவில் அழிக்கும்’’ என்று ஏக வசனத்தில் தைரியமாகப் பேசினாள்.

நமது நாட்டில் பெண்கள் சீதையின் வழி வந்தவர்கள். ஆண்கள் ஹனுமன் போன்று பெண்களை காக்கும் சுத்த வீரர்களாக இருக்க வேண்டும்.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**

ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**

# பத்தின் சிறப்புகள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

**IX. இணைபிரியா தம்பதியர் :**

*1. இந்திரன் - சசி, 2. வசிஷ்டர் - அருந்ததி, 3. சந்திரன் - ரோஹினி, 4. அகத்தியர் - லோபாமுத்திரை, 5. ச்யவனர் - சுகன்யா, 6. சத்யவான் - சாவித்திரி, 7. கபிலர் - ஸ்ரீமதி, 8. கௌதாகர் - மதயந்தி, 9. சகரர் - கேசினி, 10. நளன் - தமயந்தி.*

**X. நாடிகள் 10 :**

*1. இடைகலை, 2. பிங்கலை, 3. சுழுமுனை, 4. காந்தாரி, 5. அத்தி, 6. சிகுவை, 7. அலம்புடை, 8.புருஷன், 9. சங்கினி, 10. குரு.*

**XI. தச வாயுக்கள் :**

*1. பிராணன், 2. அபானன், 3. வியானன், 4. உதானன், 5. சமானன், 6. நாகன், 7. கூர்மன், 8. கிரகரன், 9. தேவதத்தன், 10. தனஞ்செயன்.*

**XII. தச தானங்கள் :**

*1. உப்பு, 2. எள், 3. நெய், 4. நெல், 5. பசு, 6. பூமி, 7. பொன், 8. வஸ்திரம், 9. வெல்லம், 10. வெள்ளி*

**XIII. அரசின் தச அங்கங்கள் :**

*1. மலை, 2. ஆறு, 3. நாடு, 4. ஊர், 5. மாலை (பூக்கள்), 6. பரி, 7. யானை, 8. முரசு, 9. கொடி, 10. செங்கோல்*

**XIII. முக்கிய உபநிடதங்கள் :**

*1. ஈசாவாஸ்ய, 2. கேன, 3. கட, 4. பிரச்ன, 5. முண்டக, 6. மாண்டுக்ய, 7. தைத்ரீய, 8. ஐதரேய, 9. சாந்தோக்ய, 10. பிருக தாரண்யக*

*இவற்றிற்கு ஆதிசங்கரர் உரை எழுதியுள்ளார்.*

**XIII.**

*1. வாக்கின் நற்குணம் : மெய்யுரை, நல்வார்த்தை; இன்னுரை பன்படுச்சொல்*

*2. உடலின் நற்குணம் : கோயில் சூழ்தல், தவம் செய்தல்,*

*தானம் செய்தல்*
*3. மனத்தின் நற்குணம் : ஆசையறுத்தல், தவப்பற்று, அருன்சுரத்தல்*
*ஆக பத்து.*

**XIII. சங்க காலப் பெண்புலவர்கள் :**

*1. ஔவையார், 2. ஒக்கூர் மாசாத்தியர் 3. காக்கைப்பாடினியார், 4. நச்சென்னையார் 5. குறமகள் இளவெயினி, 6. பாரிமகளிர், 7. பூதப்பாண்டியன் தேவி, 8. மானோக்கத்து நப்பசலையார், 9. வெண்ணிக் குயத்தியார் 10. முடத்தாமக் கண்ணியார்*

**XIII. திருமணப் பொருத்தம் 10 :**

*1. தினம், 2. கணம், 3. மகேந்திர, 4. ஸ்திரீதீர்க்கம், 5. யோனி, 6. இராசி, 7. இராசியாதிபதி, 8. வசியம், 9. வேதை, 10. இரஜ்ஜு*

**XIII. பத்துப்பாட்டு நூல்கள் :** *1. திருமுருகாற்றுப்படை, 2. பொரு நாற்றுப்படை, 3. சிறுபாணாற்றுப்படை, 4. பெரும்பாணாற்றுப்படை, 5. பட்டினப்பாலை, 6. நெடு நல்வாடை, 7. மலைபடுகடாம், 8. குறிஞ்சிப்பாட்டு 9. முல்லைப்பாட்டு, 10. மதுரைக்காஞ்சி*

*பத்தின் சிறப்புகள் மேலும் பல உண்டு.*

*முற்றும்.*

## ஸ்ரீ ராமநவமி உற்சவம் 17.04.2024

*நங்கநல்லூர் ராதாகிருஷ்ணா பஜன் மண்டலி மற்றும் வேதபாரதி இணைந்து தில்லை கங்கா நகர் அக்ஷயா மஹாலில் குழந்தைகளுக்கான ஸ்ரீ ராமநவமி சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம், ஸ்ரீ ராமநாம பாராயணம், பஜன் பாடல்கள், குழு பாடல்கள் நடைபெற்றன. குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.*

## பஞ்சாங்க படனம்

*ஏப்ரல் மாதம் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி அளவில் "குரோதி" தமிழ்வருட பிறப்பை முன்னிட்டு "பஞ்சாங்க படனம்" எனும் நிகழ்ச்சியானது ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளின் வேதபாரதி அமைப்பின் சார்பாக நமது பொறுப்பாளர் திரு. M. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. மன்னை திரு.நாராயணசாமி அவர்கள் தியான ஸ்லோகத்துடன் நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து திரு.சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் பஞ்சாங்கம் வாசித்து குரோதி வருடத்தின் பொதுவான பலன்களை மிகவும் தெளிவாக விளக்கினார்கள். இதில் 20க்கும் மேற்பட்டவர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியின் இறுதியாக ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## வருந்துகிறோம்

*வேதபாரதி அமைப்பின் நிறுவனர் திருப்பூர் ஆடிட்டர் ஸ்ரீ T.R.ராமநாதன் அவர்களின் அன்புத்தாயார்* **ஸ்ரீமதி ஸந்தான லட்சுமி,** *(க/பெ. CA N.ராமச்சந்திரன்) 02.04.2024 அன்று காலை சிவலோக ப்ராப்தி அடைந்தார்கள். குரு பக்தியும், பதி பக்தியும், இன்முகமும் எல்லோரிடமும் அன்பு பாராட்டியும் வாழ்ந்தவர்கள் அம்மாவின் ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்திக்கிறோம்.*

# அயோத்தி - குழந்தை ராமரின் அற்புத தரிசனம்



கலியுகத்தில், தனது ஜென்ம பூமியான அயோத்தியாவில் மீண்டும் பத்து வயது பாலகனாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமனை வாழ்நாளில் ஒரு முறையாவது தரிசித்து விடவேண்டும் என்கிற ஆவல் இன்று இந்த புண்ணிய பாரத தேசத்தின் மக்கள் ஒவ்வொருவரின் மனதிலும் இருக்கிறது என்பதுதான் சத்தியம். இந்துக்கள் மட்டுமல்லாமல், அனைத்து மத மக்களின் மனதிலும் ஏன், உலகளவிலும் கூட, இந்த எண்ணம் குடிகொண்டுள்ளது என்றே தோன்றுகிறது. இத்தகைய ஒரு மாபெரும் சாதனையை சத்தியமாக்கிக் காட்டியது நமது பாரதப் பிரதமர் திரு.நரேந்திர தாஸ் மோடி அவர்களுக்கும், ராமஜென்ம பூமியான அயோத்தியில், ஸ்ரீராமர் மீண்டும் அவதரிக்க வேண்டும் என்பதற்காக உயிர் தியாகம் உள்பட பல்வேறு தியாகங்களைச் செய்துள்ள அனைத்து மக்களின் பாதாரவிந்தங்களில் நம் இதய பூர்வமான நன்றிகளை சமர்ப்பித்துக் கொள்வோம்.

குழந்தை ஸ்ரீ ராமரை அயோத்தியில் தரிசிக்க வேண்டும் என்கிறஎண்ணம் நமக்குள் தீவிரமாக இருந்துவிட்டால், அதற்கான தெய்வீக அழைப்பு அவரிடமிருந்து தானாகவே வரும் என்பது என்னளவில் சாத்தியமானதை அவரின் கருணைக்கடாக்ஷம் என்றேகருதுகிறேன். ஸ்ரீ ராமனை தரிசித்துவிட வேண்டும் என்று மனமார ஆசைப்பட்டேனே தவிர அதற்கான முயற்சிகளை நான் எடுக்கவில்லை. இன்னும் கொஞ்ச நாட்கள் போகட்டும் என்று

இருந்துவிட்டேன். ஜனநெரிசலை நினைத்து பயந்தும் போய்விட்டேன். ஆனால் ஸ்ரீ ராமரின் எண்ணம் வேறாக இருந்தது. என் ஆத்ம தோழியின் மகன் தன் குடும்பத்தினருடன் என்னையும் ஒருத்தியாக இணைத்து, அனைத்து பயண ஏற்பாடுகளையும், அயோத்தியில் தங்கும் வசதிகளையும் செய்துவிட்டு திடீரென்று ஒருநாள் சொன்னபோது நான் உண்மையில் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். இப்படி ஒரு பாக்கியமா எனக்கு! இப்படி ஒரு தெய்வ கருணையா! என்று நினைத்து நினைத்து மனம் உருகிப்போனது.

“ஆம், நான்தான் உன்னை அழைத்திருக்கிறேன்” என்று அந்த குழந்தை ராமரே சொல்வது போல், இந்த செய்தி வந்த மறுநாள், ஒரு அன்பர் எதிர்பாராமல் வீட்டிற்கு வந்து, “உங்களுக்கென்று ஒரு புத்தாண்டு பரிசு எடுத்துவைத்திருந்தேன். சற்று தாமதமாகிவிட்டது. இந்தாருங்கள் என்று ஒரு வெள்ளிக்காசைக் கொடுத்தார். அதனைக் கையில் வாங்கியதும் இன்ப அதிர்ச்சிக்கு உள்ளானேன். அதில் குழந்தை ஸ்ரீ ராமரின் திருவுருவம் பதிக்கப்பட்டிருந்தது. என் உள்ளங்கைக்கு வந்துவிட்ட குழந்தை ஸ்ரீ ராமரைக்கண்டதும், கண்கள் பனித்துவிட்டன. அப்படியே அதனை பூஜையறையில் வைத்து நமஸ்கரித்தேன். இதனை தெய்வீக அழைப்பு / அங்கீகாரம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது சொல்லுங்கள்.

சினேகிதியின் மகன் சிறப்பாக பயண ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மொத்தம் பத்து பேர்கள். அனைவருக்கும் மார்ச் 9ம் தேதி புறப்படுவதற்கான லக்னோ விமானப்பயணம். லக்னோவிமான நிலையத்திலிருந்து அயோத்தி எல்லை வரை வேனில் ஏற்பாடு. அயோத்தியா எல்லையை அடைவதற்கு மாலை ஆறரை மணி ஆகிவிட்டது. அயோத்தி சாலைகளில் மகாமக விழாக்கால

கூட்டத்தைப் பார்த்து பிரமித்துப் போய், நல்ல வேளையாக ஒரு சிறந்த முடிவினை எடுத்தோம். பயணக்களைப்பு மற்றும் உடல் வருத்தம் பாராமல் அன்றே(வெள்ளிக்கிழமை), அப்போதே என்ன பாடுபட்டாவது குழந்தை ஸ்ரீ ராமரை தரிசனம் செய்துவிடுவது என்பதுதான் அது. இன்றேஇந்தக் கூட்டம் என்றால், சனி ஞாயிறுகளில் கூட்டம் எப்படியிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

அயோத்தி எல்லை வரைதான் நம் வாகனம். அதன்பிறகு ஊருக்குள் செல்வதற்கு “பவர் ஆட்டோ” தான். குழந்தை ராமர் ஆலயம் செல்வதற்கு ரூ.200 லிருந்து 300 வரை கேட்கிறார்கள். ஆனால் ஆறு பேர்கள் அமரும் வசதி கொண்டது. இந்த ஆட்டோவும் நம்மை நேராக ஸ்ரீ ராமர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றுவிடவில்லை. அயோத்தின் காவல் தெய்வமான “ஹனுமன்கரி” வரையில் சென்று இறக்கி விட்டுவிடுகிறது. அங்கிருந்து புதியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள குழந்தை ஸ்ரீ ராமரின் நுழைவு வாயிலை அடைவதற்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து தான் செல்ல வேண்டும். போகும் வழியெல்லாம், திரேதாயுதத்தில் ஸ்ரீ ராமனை வரவேற்றபோது நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது என்றவர்ணனையைக் கேட்டிருப்போம். ராமாயணம் தொலைக்காட்சித் தொடரில் பார்த்தும் இருப்போம். இந்தக் கலியுகத்திலும் அதே கோலாகலம், அதே உற்சாகம், அதே ஆர்பாட்டம் என்றால் மிகையில்லை. அயோத்தியின் அழகை ரசித்துக் கொண்டே செல்லலாம்.

அயோத்தி மாநகரத்தின் நுழைவாயிலேயே சூரிய குலத்தோன்றலின் ராஜ்யம் இது என்று நமக்கு உணர்த்தும் வகையில் சூரிய குலச்சின்னம்



அமைக்கப்பட்ட அறைவட்ட நுழைவாயில் இருக்கிறது. தொடர்ந்து சாலை சுவர்களில், கடைகளின் முகப்புக்களில், கட்டிடங்களின் சுவர்களில் என்று பார்க்கும் இடமெல்லாம் ஸ்ரீராமாயணக் காட்சிகளும் பாத்திரங்களும் ஓவியமாகத்தீட்டப்பட்டு, நம் நெஞ்சை நிறைக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஸ்ரீ ராமர் பொறித்த காவிக்கொடி பறக்கிறது. சாலையில் நடமாடும் மனிதர்களின் நெற்றியில் மஞ்சள், ஆரஞ்சு வர்ணத்தில் "ஜெய் ஸ்ரீ ராம்" என்று அச்சுகுத்திக் கொள்கிறார்கள். கழுத்தில், வில்லேந்திய ஸ்ரீ ராமர் உருவம் பொறித்தகாவித்துண்டும், பெண்கள் துப்பட்டாவும் அணிந்து கொண்டிருக்கிறார்கள். எங்கும் காவிக்கொடி! இந்து ராஜ்யம் என்பது இதுதானோ! ஸ்ரீ ராமஜென்ம பூமிக்கு உங்களை வரவேற்கிறோம் என்கிறவார்த்தைகளே நம்மை உற்சாகப்படுத்துகின்றன. இதே உற்சாகத்துடன் ஸ்ரீ ராமரை தரிசனம் செய்ய காத்திருங்கள்.

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்"**

## நீர்மோர் வழங்கும் நிகழ்ச்சி

கோடைக்கால நீர்மோர் வழங்குதல் நிகழ்ச்சி கிரீன் வேளச்சேரி, வேதபாரதி இணைந்து 14.04.2024 முதல் 31.05.2024 வரை தாகம் தீர்க்க வேளச்சேரி பெருங்குடி ரயில் நிலையம் அருகில் நீர்மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. நன்கொடையாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.



## ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646**; ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**ஸ்ரீ M. இராமகிருஷ்ணன் புதல்வர்கள்**

**அறங்காவலர்**

71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*


*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB
CITY UNION BANK
City Union Bank introduces
“ Voice Biometric Authentication”
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple·seamless·secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
“Your voice is your password”

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26

Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th May 2024



வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

---

---

---

---

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.